TAMIL NADU PUBLIC SERVICE ...
TAPPAL
CHENNAI

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

கல்வித் தகுதி – பொதுப்பணிகளில் நியமனம் செய்ய – புதுதில்லியிலுள்ள ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரி இராஷ்டிரிய சமஸ்கிருத வித்யா பீடத்தால் (நிகர் பல்கலைக் கழகம்) வழங்கப்படும் பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளுக்கு அங்கீகாரம் அளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(ஆர்) துறை

அரசாணை நிலை எண்.230 நாள்: 19.9.1997

படிக்கப்பட்டது:-

1. அரசு ஆணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(ஆர்)துறை, நாள்.20.12.93.
2. புதுதில்லி ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரி ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யா பீடப் பதிவாளரது கடித எண்.ஆர்.எஸ்.வி/62/1993/829, நாள்.17.2.93.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரின் கடித எண்.6190/ஆர்.என்.டி./எ5/96, நாள்.6.9.96 மற்றும் 19.5.97.

------

ஆணை:

ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரி ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யா பீடத்தின் (நிகர் பல்கலைக் கழகம்) பதிவாளர் தங்களது பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் சாஸ்திரி(பி.ஏ), ஆச்சார்யா(எம்.ஏ.), சிக்ஷா ஆச்சார்யா (எம்.எட்), வித்யா வர்த்தி(பி.எச்.டி.) மற்றும் சிக்ஷா சாஸ்திரி(பி.எட்) ஆகிய பட்டப் படிப்பு மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளை தமிழ் நாட்டிலுள்ள அரசுப் பொதுப்பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளிக்குமாறு அரசைக் கேட்டுள்ளார்.

2. 20.12.93 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(ஆர்)துறையின் அரசு ஆணை நிலை எண்.441–ல் ஆணையிட்டவாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை தலைமையாகக் கொண்டு இதற்கென அமைக்கப்பட்ட குழுவின் ( Committee )முன்னர் புதுதில்லியிலுள்ள ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரி ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யா பீடத்தின் (நிகர் பல்கலைக் கழகம்) பதிவாளரது கோரிக்கை பரிந்துரைக்காக வைக்கப்பட்டது.

3. 15.7.94, 19.8.96 மற்றும் 11.4.97 ஆகிய தேதிகளில் நடந்த அக்குழுவின் கூட்டங்களில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு, ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரி ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யா பீடம்–நிகர் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் சாஸ்திரி(பி.ஏ.), ஆச்சார்யா(எம்.ஏ), சிக்ஷா ஆச்சார்யா(எம்.எட்), வித்யா வர்த்தி(பி.எச்.டி) மற்றும் சிக்ஷா சாஸ்திரி(பி.எட்) ஆகியப் பட்டப் படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகளை தமிழ் நாட்டிலுள்ள சமஸ்கிருத ஆசிரியர் பணிகளுக்கு, வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளிக்க அரசுக்கு இக்குழு பரிந்துரை செய்துள்ளது.

....2

4. குழுவின் பரிந்துரைகளை, அரசு தீவிர பரிசீலனை செய்தபின் ஏற்றுக் கொள்ளலாம் என முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, புது தில்லியிலுள்ள ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரி இராஷ்டிரிய சமஸ்கிருத வித்யா பீடத்தால் (நிகர் பல்கலைக் கழகம்) வழங்கப்படும் சாஸ்திரி(பி.ஏ), ஆச்சாரியா(எம்.ஏ), சிக்ஷா ஆச்சாரியா(எம்.எட்), வித்யா வாரிதி(பி.எச்.டி) மற்றும் சிக்ஷா சாஸ்திரி(பி.எட்) ஆகியப் பட்டப் படிப்பு மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளுக்கு தமிழ் நாட்டிலுள்ள [illegible] அங்கீகாரம் அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. பாஸ்கரதாஸ்,
அரசு செயலாளர்

பெறுநர்:
-----

அனைத்துச் செயலர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9
அனைத்துத் துறைத் தலைமை அலுவலர்கள்.
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2
பதிவாளர், ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரி இராஷ்டிரிய சமஸ்கிருத
வித்யா பீடம் (நிகர் பல்கலைக் கழகம்),
காட்வாரியா சாராய், புதுதில்லி-110 016.

நகல்:

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9
அனைத்துப் பிரிவுகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9

/ஆணைப்படி -அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்